<u>முதன்மை சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு</u>
முன்னிலை: திரு.எம்.ராமச்சந்திரன், பி.காம்., பி.எல்.,
முதன்மை சார்பு நீதிபதி, திருச்செங்கோடு
2026–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 10–ம் நாள் திங்கள்கிழமை
<u>IA.No.14/2026 in O.S.No.97/2010</u>

1) ஜெயம்மாள் (இறந்தார்)****
2) R.சசிகுமார் .... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

01) ஏ.பரமசிவம்
02) பெரியசாமி
03) ஜி.ருக்மணி
04) ஜி.கோபி
05) ஏ.சிங்காரவேல்
06) எ.கண்ணன்
07) அமுதா
08) ஏ.மதுசூதனன்
**09) ஏ.மோகன்ராஜ்
**10) ராணி
**11) சரஸ்வதி
**12) லட்சுமி
**13) டி.லதா
**14) வேலுமணி
**15) சுமதி
**16) செந்தில்குமார்
**17) கே.பாலகிருஷ்ணன்
**18) ஆர். பூபதிராஜ்
**19) எஸ்.செந்தில்குமார்
**20) ஜி.சரஸ்வதி (இறந்தார்)***
**21)ஜி.தேன்மொழி
**22) எம்.சரவணன்
**23) ஏ.சம்பத்
**24) வட்டாட்சியர், திருச்செங்கோடு

***25) எஸ்.பொன்னி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்னர் 10–08–2026–ம் தேதியன்று இறுதியான விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, 2–ம் மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்

திரு.A.P.வெங்கட்கண்ணன், அவர்கள் முன்னிலையாகியும், 5, 11 முதல் 15, 18, 19, 21, 22 மற்றும் 25–ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.கைலாசநாதன், அவர்கள் ஆஜராகியும், மற்றும் 1 முதல் 4 மற்றும் 6 முதல் 10. 16, 17. 23, 24–ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும் மற்றும் 1–ம் மனுதாரர் இறந்ததாலும், மற்றும் 20–ம் எதிர்மனுதாரர் இறந்ததாலும் மற்றும் இருதரப்பிலும் முன்னிடப்பட்ட வாதுரை மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரை என் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>உ த் த ர வு</u>

உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151–ன்கீழ் மனுதாரர்கள்/வாதிகள் மனு சொத்தின் இயற்கை அமைப்புகளையும், குறித்தும் ஒரு மாதிரி வரைபடத்துடனும் அதில் உள்ள தென்னை மரங்களின் எண்ணிக்கை குறித்தும் அறிக்கை தாக்கல் செய்ய கமிஷனர் நியமனத்திற்கு உத்திரவு பிறப்பிக்க கோரி 2–ம் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம் :</u>–

(i) 2–ம் மனுதாரர் அசல் வழக்கில் 2–ம் வாதி ஆவார். மனுவில் 1–ம் எதிர்மனுதாரர் 2–ம் மனுதாரரின் தாயார். மனுவில் எதிர்மனுதாரர்கள் மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதிகள் ஆவார்கள். இம்மனுவில் 2–ம் மனுதாரரும். இறந்த 2–ம் மனுதாரரின் தாயார் 1–ம் மனுதாரரும் பிரதிவாதிகள் மீது விளம்புகை பரிகாரத்திற்கும் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கும் தாக்கல் செய்துள்ளார்கள். வழக்கு நிலுவையில் உள்ள போது 2–ம் மனுதாரரின் தாயார் இறந்துவிட்டார். மேற்படி அசல் வழக்கில் 1–ம் பிரதிவாதி பவர் பெற்றவர் ஆவார். வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையை இந்த பிரமாணபத்திரிக்கையின் ஓர் அங்கமாக வாசிக்கும்படி மாண்பமை நீதிமன்றத்தை கோருகிறார். 2–ம் மனுதாரரின் தெரியாமல், 1–ம் பிரதிவாதியிடம் 2 முதல் 23 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற நபர்கள் ஆவார்கள். மேற்படி 2 முதல் 23 பிரதிவாதிகள் கிரையம் பெற்றதாக கூறியுள்ள சங்கதிகள் முற்றிலும் தவறான சங்கதிகள் ஆகும். 2 முதல் 23 பிரதிவாதிகள் பெற்ற கிரையம் நாளது வரை அமுலுக்குவராத ஒன்று ஆகும். மேலும் தாவா சொத்தில் 2 முதல் 23 பிரதிவாதிகள் நாளது வரை சுவாதீன அனுபவத்தில் இருந்ததே இல்லை என்பதே உண்மையான சங்கதி ஆகும்.

(ii) தாவா சொத்தானது பிரதிவாதிகள் தரப்பில் வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சக்குபந்தி கண்டு கிரையம் பெறப்பட்டுள்ளது. குறிப்பிட்டுள்ள சங்திகள் முற்றிலும் பொய்யான சங்கதிகள் ஆகும். தாவா நாளது வரை விவசாய நிலம் ஆகும். மேலும், வாதி தாவா தாக்கல் செய்த சமயத்திலேயே வழக்குரையில் "வாதிகள்தான் மேற்படி நிலத்தில் விவசாயம் செய்து வருகின்றார். அந்த நிலத்தில் கரும்பு, சோளம், தென்னை பயிரிடப்பட்டுள்ளது" என்றும் குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா தாக்கல் சமயத்தில் வாதிகள் தான் தாவா சொத்து விபரத்தில் விவசாயம் செய்து வருகின்றார் என்று நிரூபணம் செய்ய அரசிற்கு வரி செலுத்திய கந்தாய ரசீதுகளை ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளார். மேலும், தாவா சொத்திற்கான 1436 பசலி ஆண்டிற்கான அடங்கல் உண்மை நகலை இந்த மனுவுடன் ஆவணமாக தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணத்திலிருந்து தாவா சொத்தில் பிரதிவாதிகள் கூறுவது போல் வீட்டு மனைகள் பிரிக்கப்படவில்லை என்பதே உண்மையான சங்கதி ஆகும். மேலும், பிரதிவாதிகள் கூறுவது போல் வீட்டுமனைகளாக பிரிக்கப்பட்டிருந்தால் வீட்டுமளைக்கான ஒப்புதல் பெறப்பட்ட ஆவணங்ளை எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆவணங்களாக தாக்கல் செய்திருப்பார்கள். 2 முதல் 23 எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தில் ஒரு போதும் சுவாதீன அனுபவத்தில் இருந்ததில்லை. 2 முதல் 23 எதிர்மனுதாரர்கள் உண்மையில் கிரையம் பெற்றிருந்தால் சுவாதீனத்தில் இருந்திருப்பார்கள். தாவா சொத்தானது விவசாய நிலமாக நாளது வரை உள்ளதால் 2 முதல் 23 எதிர்மனுதாரர்கள் சுவாதீன அனுபவத்திற்கு வழக்கு தாக்கல் செய்யததால் 2 முதல் 23 எதிர்மனுதாரர்கள் சுவாதீனம் கோரி வழக்கு சட்டப்படி தாக்கல் செய்ய இயலாது. மேலும் கால தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

(iii) மனு சொத்தானது 5,12,13,15,16,19 முதல் 24 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வீட்டுமனைகளாக உள்ளது என்று குறிபிடப்பட்டுள்ளது. ஆனால், 2-ம் மனுதாரரின் தரப்பில் மனு சொத்தானது விவசாய நிலமாக உள்ளது என்று வழக்குரையில் கூறியுள்ளார். மேலும், மனு சொத்தானது தற்போது தென்னந்தோப்பாக உள்ளது. மேலும், மனு சொத்தில் ஒரு கிணறு மற்றும் ஒரு ஆழ்துளை கிணறும் உள்ளது. மேற்படி மனு சொத்தானது தென்னந்தோப்பாகவும் கிணறு மற்றும் ஆழ்துளை உள்ள என நிரூபிக்க நிறைய வாய்மொழி சாட்சியங்களை விசாரிக்க நேரிடும். ஆகையால், மனு சொத்தில் உள்ள தென்னந்தோப்பினை பொருத்து மனு சொத்தின் இயற்கை அமைப்புகள் குறித்தும் வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய கமிஷனர் நியமனத்திற்கு உத்திரவு செய்ய இந்த மனுவை ஆணையர் நியமனத்திற்கு தாக்கல் செய்கிறார். மேற்படி ஆணையர் நியமனத்தினால் எதிர்மனுதாரர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. ஆணையர் ஊதியத்தை 2-ம் மனுதாரர் செலுத்த தயாராக உள்ளார். மனு சொத்தின் இயற்கை அமைப்புகளை குறித்தும் ஒரு மாதிரி

வரைபடத்துடனும் அதில் உள்ள தென்னை மரங்களின் எண்ணிக்கை குறித்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய ஆணையர் நியமனம் செய்யாவிட்டால், எனக்கு பெருத்த கஷ்ட, நஷ்டம் ஏற்படும். மனு சொத்தின் இயற்கை அமைப்புகள் குறித்தும் ஒரு மாதிரி வரைபடத்துடனும் அதில் உள்ள தென்னை மரங்களின் எண்ணிக்கை குறித்தும் அறிக்கை தாக்கல் செய்ய கமிஷனர் நியமனத்திற்கு உத்தரவு செய்யக் கோரி 2–ம் மனுதாரரால் கோரப்படுகிறது. எனவே, இம்மனுஅனுமதிக்கப்பட வேண்டுமென சொல்லப்படுள்ளது.

3. <u>22–ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்து 5, 11 முதல் 15,18,19,21,23,25 எதிர்மனுதாரர்கள் ஏற்றுக் கொள்ளும் எதிரருரையின் சுருக்கம்</u>–

(i) மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு தவறானது. பொய்யானது. மோசடியானது. சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத் தக்கதல்ல. இந்த எதிருரையில் 22–ம் எதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் பிரமாண வாக்குமூலம் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை தவறான மற்றும் பொய்யான சங்கதிகள் என அறுதியிட்டு மறுக்கிறார். மேற்படி வழக்கினை இரண்டாம் எதிர்மனுதாரரும், அவரது தாயாரான 1–ம் மனுதாரரும் பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி உண்மை சங்கதிகளை மறைத்தும், பொய்யான மற்றும் தவறான சங்கதிகளின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளார்கள் என்பது உண்மை. ஆகவே. மேற்படி வழக்கு விசாரணையை கடந்த 16 ஆண்டுகளாக நடத்த முன்வராமல் ஒன்றன்பின் ஒன்றாக பல்வேறு மனுக்களை தாக்கல் செய்து வழக்கு விசாரணையை காலதாமதம் செய்து வருகின்றார். 2 முதல் 23 பிரதிவாதிகள் மனுதாரர்கள் வாதிகளுக்கு தெரியாமல். தாவா சொத்தினை 1–ம் பிரதிவாதியிடம் கிரயம் பெற்ற நபர்கள் என்றும், மேற்படி 2 முதல் 23 பிரதிவாதிகள் கிரயம் பெற்றதாக குறிப்பிட்டுள்ள சங்கதிகள் தவறான மற்றும் பொய் சங்கதிகள். மேற்படி கிரைய பத்திரங்கள் அமலுக்கு வராதவை என்றும், தாவா சொத்தில் 2 முதல் 23 பிரதிவாதிகள் சுவாதீன அனுபவத்தில் இருந்ததில்லை. பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் தவறான மற்றும் பொய் சங்கதிகள் என 22–ம் எதிர்மனுதாரர் அறுதியிட்டு மறுக்கிறார். இரண்டாம் மனுதாரரின் பிரமாண வாக்கு மூலத்தில் பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்து வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. சக்குபந்தி கண்டு கிரயம் பெறப்பட்டுள்ளது என்றும் எதிர்வாதம் செய்துள்ளார்கள் என்று குறிப்பிட்டுள்ள சங்கதி உண்மை.

(ii) தாவா சொத்து நாளதுவரை விவசாய நிலம் என்றும், தாவா தாக்கல் செய்த சமயத்திலேயே வழக்குரையில் வாதிகள் தாவா சொத்தில் விவசாயம் செய்து கரும்பு, சோளம்,

தென்னை பயிரிடப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். வாதிகள் தாவா சொத்தில் விவசாயம் செய்து வருகின்றார் என்பதை நிரூபிக்க அரசிற்கு வரி செலுத்திய கந்தாய ரசீதுகளை ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்திற்கான 1436 பசலி ஆண்டிற்கான அடங்கல் நகலை மனுதாரர்கள் மனுவுடன் தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணத்திலிருந்து தாவா சொத்தில் பிரதிவாதிகள் கூறுவது போல் வீட்டு மனைகள் பிரிக்கப்படவில்லை என்றும், வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு இருந்தால் வீட்டுமனைக்கான ஒப்புதல் பெறப்பட்ட ஆவணங்களை எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆவணங்களாக தாக்கல் செய்திருப்பார்கள். 2 முதல் 23 எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தில் ஒருபோதும் சுவாதீன அனுபவத்தில் இருந்ததில்லை. தாவா சொத்து விவசாய நிலமாக நாளதுவரை உள்ளதால் 2 முதல் 23 எதிர்மனுதாரர்கள் சுவாதீன அனுபவத்திற்கு வழக்கு தாக்கல் செய்யாததால் மனுதாரர்கள் சுவாதீனம் கோரி வழக்கு சட்டப்படி தாக்கல் செய்ய இயலாது. கால தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் தவறான மற்றும் அப்பட்டமான பொய் சங்கதிகளாகும்.

(iii) 2 முதல் 25 பிரதிவாதிகள் தாவா சொத்தினை கிரயம் பெற்ற காலத்தில் வீட்டுமனை நிலங்களாக பிரித்து விற்பதற்கு அரசாங்க அனுமதி தேவையில்லை. ஆகவே வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்ட நிலங்களை மட்டுமே பிரதிவாதிகள் கிரயம் பெற்றுள்ளதால் தற்போது புதிதாக வீட்டுமனை அங்கீகாரங்களை உருவாக்க இயலாது என்ற விபரம் தெரிந்து கொண்டார். மனுதாரர்கள் வீட்டு மனை பிரிவாக பிரிக்கப்பட்டதற்கான ஆவணம் இல்லை என பொய் சங்கதியை குறிப்பிட்டு இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

(iv) 5,12,13,15,16,19 முதல் 24 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் வீட்டு மனைகளாகவே தாவா சொத்து உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தாவா சொத்தானது விவசாய நிலமாக உள்ளதாக மனுதாரர்கள் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால் மனு சொத்து தற்போது தென்னந்தோப்பாக உள்ளது. மனு சொத்தில் ஒரு கிணறு, ஒரு ஆழ்துளை கிணறு உள்ளது. மனு சொத்து தொன்னந்தோப்பாகவும், கிணறு மற்றும் ஆழ்துளை கிணறு உள்ளது என்பதை நிரூபிக்க நிறைய வாய்மொழி சாட்சியங்களை விசாரிக்க நேரிடும். ஆகையால் மனு சொத்தில் உள்ள தென்னந்தோப்பினை பொருத்து மனு சொத்தின் இயற்கை அமைப்புகளையும் குறித்து வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய கமிஷனர் நியமனத்திற்கு உத்தரவு செய்ய மனுவினை ஆணையர் நியமனத்திற்கு தாக்கல் செய்கிறார். ஆணையர் நியமனத்தினால்

எதிர்மனுதாரர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. ஆகவே மனு சொத்தின் இயற்கை அமைப்புகள் குறித்தும் ஒரு மாதிரி வரைபடமும், அதிலுள்ள தென்னை மரங்களின் எண்ணிக்கை குறித்தும் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய ஆணையர் நியமனம் செய்யப்படாவிட்டால் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்று பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் தவறான மற்றும் பொய் சங்கதிகள் என 22–ம் எதிர்மனுதாரர் அறுதியிட்டு மறுக்கிறார்.

(v) மனுதாரர்கள் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்திற்கு செலுத்திய வேண்டிய கடனை திரும்ப செலுத்தும் நோக்கத்தில்தான் பஞ்சாயத்தாரர்கள் செய்த பைசல்படி மனுதாரர்கள்/வாதிகள் தன்னிச்சையாகவும், முழு மன சம்மதியிலும் தாவா சொத்தினை விற்பனை செய்வதற்காக முதலாம் பிரதிவாதி பெயரில் கடந்த 14–12–1998–ம் தேதியில் பொது அதிகார பத்திரம் எழுதிக் கொடுத்தார். அந்த பொது அதிகார பத்திரத்தின் அடிப்படையிலேயே முதலாம் பிரதிவாதி வாதிகளுக்கு தெரிந்தே வீட்டு மனைகளாக பிரித்திருந்த தாவா சொத்துக்களில் ஒரு பகுதியை 2 முதல் 23 பிரதிவாதிகளுக்கு தனித்தனி கிரயங்களாக விற்பனை செய்து அந்த கிரைய சொத்துகளை 2 முதல் 23 பிரதிவாதிகளுக்கு சுவாதீனமும் கொடுத்து விட்டார். மனுதாரர்களும் 2 முதல் 23 பிரதிவாதிகளின் கிரய பத்திரங்கள் உண்மையானவை, நடைமுறைப் படுத்தப்பட்டவை என ஒப்புக் கொண்டு அவற்றை ஆட்சேபிக்கவில்லை, ரத்து செய்யக் கோரி வழக்கு தாக்கல் செய்யவும் இல்லை.

(vi) பின்னிட்டு மனுதாரர்களுக்கும், 1–ம் பிரதிவாதிக்கும் இடையே மனவருத்தம் ஏற்பட்டதாக கூறி மனுதாரர்கள் முதலாம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்தினை பொருத்து பொது அதிகார பத்திரத்தினை கடந்த 17–08–1999–ம் தேதியில் ரத்து செய்து அந்த ஆவணத்தினை பதிவு செய்துள்ளார். மேற்படி பொது அதிகார ரத்து பத்திரத்திலேயே அந்த தேதிக்கு முன்பு வரையிலும், 1–ம் பிரதிவாதி விற்பனை செய்திருந்த கிரைய பத்திரங்களை ஒப்புக் கொண்டு விற்பனை செய்யப்பட்ட நிலம் போக மீதமுள்ள சொத்துக்களை மட்டுமே மனுதாரர்கள் பராமரித்து விற்பனை செய்ய விரும்புவதாக குறிப்பிட்டும், மேற்படி பொது அதிகார ரத்து பத்திரத்தின் சொத்து விவரத்தில் மூன்று அயிட்டங்களும் சேர்த்து ஏ.3.80 மூன்று ஏக்கர் எண்பது செண்ட் நிலங்களில் நாளது வரையில் கிரையம் செய்து கொடுத்தது போக மீதி உள்ள நிலங்கள் பூராவும் என்று மட்டுமே மனுதாரர்கள் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். ஆகவே, தாவா சொத்தில் ஒரு பகுதியை 1–ம் பிரதிவாதி 2 முதல் 23 பிரதிவாதிகளுக்கு வீட்டு மனைகளாக

விற்பனை செய்த விவரம் மனுதாரர்களுக்கு கடந்த 17–08–1999–ம் தேதியில் நன்கு தெரியும் என நிரூபணமாகும்.

(vii) கடந்த 17–08–1999–ம் தேதியிலேயே 2 முதல் 23 பிரதிவாதிகளின் கிரையப் பத்திரங்களை உண்மையானவை, சரியானவை என ஒப்புக் கொண்டு பதிவு பெற்ற பொது அதிகார ரத்துப் பத்திரம் விற்பனை செய்யாத மீதமுள்ள தாவா சொத்துகளுக்கு ஏற்படுத்தியுள்ள மனுதாரர்கள் மேற்படி பதிவு பெற்ற பத்திர சங்கதிக்கு முரணாக 2 முதல் 23 பிரதிவாதிகளின் பெயரில் தாவா சொத்துக்கள் குறித்து கிரையப் பத்திரங்கள் ஏற்பட்ட விவரமே தெரியாது. அவர்கள் கிரயமே செல்லாது. அவர்கள் சுவாதீனத்தில் இல்லை என்றும் பொய்யாக குறிப்பிட்டு இந்த வழக்கினை 11 ஆண்டுகள் கழித்து கடந்த 2010–ம் ஆண்டில் தாக்கல் செய்துள்ளது காலவரையறை சட்டத்தாலும், முரண்தடை, குறிப்பிசைவு கோட்பாட்டாலும் பாதிக்கப்பட்டது என தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும். ஆகவே மனுதாரர்கள் பொது அதிகார ரத்து பத்திரத்திலேயே தாவா சொத்துக்கள் 2 முதல் 23 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்யப்பட்ட விபரத்தை ஒப்புக்கொண்டு ஏற்படுத்தியுள்ள நிலையில் தாவா சொத்தில் 2 முதல் 25 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்யப்படவில்லை. அவர்கள் சுவாதீனத்தில் இல்லை. மனுதாரர்களின் ஆவணத்திற்கு முரணாக குறிப்பிட்டு நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி 26 ஆண்டுகள் கழித்து தாக்கல் செய்துள்ள இந்த மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என முதன்மை நோக்கிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும்.

(viii எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையிலேயே 2 முதல் 23 பிரதிவாதிகள் கிரயம் பெற்ற மனை நிலங்களில் மனுதாரர்களின் சுவாதீனத்தினை குறிப்பாக மறுத்திருந்தபோதும், அப்போதே மனுதாரர்கள் ஏன் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனு தாக்கல் செய்யவில்லை என்பதற்கான நம்பகமான காரணத்தை குறிப்பிட்டு கூறவில்லை. ஆகவே, மேற்படி மனுவினை தாக்கல் செய்துள்ளதில் மனுதாரர்கள் தரப்பில் நல்லெண்ணமோ, உண்மையோ இல்லை என நிரூபணமாகும். தீரமானிக்கப்பட்ட சட்டமேற்கோள்கள்படி தரப்பினர்கள் தாவா சொத்தின் சுவாதீனத்தை ஆவணங்கள் மற்றும் வாய்மொழி சாட்சியங்கள் மூலமாகவே நிரூபிக்க வேண்டும். நீதிமன்ற ஆணையர் மூலம் சுவாதீனத்தை நிரூபணம் செய்யக் கூடாது சாட்சியம் சேகரிக்கக் கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆகவே, இந்த வழக்கில் தாவா சொத்தின் சுவாதீனம் குறித்து நிரூபிக்க நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய வேண்டும் என மனுதாரர்கள் கோரியுள்ள பரிகாரம் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும்.

(ix) தாவா சொத்தில் ஒரு பகுதி மட்டுமே 2 முதல் 23 பிரதிவாதிகளுக்கு வீட்டுமனையாக விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேற்படி கிரையப்பத்திரங்கள் ஏற்பட்டு 26 ஆண்டுகள் முடிவடைந்துள்ள நிலையில் மேற்படி வீட்டுமனை நிலங்கள் பராமரிப்பின்றி தரிசு நிலங்களாக உள்ளன. மேற்படி வீட்டு மனைகளாக விற்பனை செய்யப்பட்ட பகுதிகள் போக மீதி நிலத்தை மனுதாரர்கள் விவசாய நிலங்களாக அனுபவித்து வருவதை சாதகமாக்கிக் கொண்டு மாண்பமை கோர்ட்டாரவர்களை திசைதிருப்பும் நோக்கத்தில் அனைத்து தாவா சொத்துக்களுமே விவசாய நிலங்களாக உள்ளதாக பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு அவர்களுக்கு வேண்டிய வருவாய் துறை அதிகாரிகளின் துணையுடன் அடங்கலை மோசடியாக பெற்று இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

(x) இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 16 ஆண்டுகள் கழித்து தற்போது விசாரணைக்காக போடப்பட்டுள்ள நிலையில் மீண்டும் வழக்கு விசாரணையை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற தீய எண்ணத்தில் மனுதாரர்கள் எவ்வித முகாந்திரமும் தகுதியான காரணமும் இன்றி தாவா சொத்தின் இயற்கையமைப்பினை பார்வையிட நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல செய்துள்ன என தீர்மானித்து தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும். மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவினை நஷ்டஈட்டு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய கோரி எதிர்மனுதாரர்கள் தெரிவித்துள்ளார்கள்.

4) இந்த மனுவில், இருதரப்பிலும் சாட்சியங்கள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடுசெய்யப்படவில்லை. இம்மனுவில் இந்நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டிய சங்கதி என்னவென்றால் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? அல்லது இல்லையா? என்பதாகும்.

5) <u>தீர்வு :</u>

(i) மனுதார் தரப்பில் மேற்படி அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் வழக்கு நிலுவையில், 1-ம் மனுதாரர் இறந்துவிட்டதாகவும், அசல் வழக்கில் 1-ம் பிரதிவாதி பொது அதிகாரம் பெற்ற முகவர் என்றும், மனுதாரருக்கு தெரியாமல், 1-ம் பிரதிவாதி மற்றும் 2, முதல் 23 பிரதிவாதிகள் கிரையம்

பெற்றவர்கள் என்றும், 2, முதல் 23 பிரதிவாதிகள் கிரையம் பெற்றதாக கூறியுள்ள சங்கதி முற்றிலும் தவறானது என்றும், மேற்படி கிரையம் நாளது வரை அமலுக்கு வரவில்லை என்றும், தாவா சொத்தில் 2 முதல் 23 பிரதிவாதிகள் நாளதுவரை சுவாதீன அனுபவத்தில் இருந்ததில்லை என்றும், தாவா சொத்தானது வீட்டு மனை இடங்களாக பிரிக்கப்பட்டுள்ளது என்றும், குறிப்பிட்ட சக்குபந்திகள் கண்டு கியைம் பெறப்பட்டுள்ளதாக பிரதிவாதிகள் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிள் பொய்யான சங்கதிகள் என்றும் தாவா சொத்தானது நாளதுவர விவசாய நிலமாகவே இருப்பதாகவும், தாவா தாக்கல் செய்த சமயத்திலேயே தாவா சொத்தில் வாதிகள் விவசாயம் செய்து கரும்பு, சோளம், தென்னை பயிடப்பட்டுள்ள விவரம் வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், தாவா சொத்தில் வாதிகள் விவசாயம் செய்து வருகிறார்கள் என்பதை நிரூபணம் செய்வதற்கு அரசிற்கு வரி செலுத்தி கந்தாய ரசீதுகளும் தாவா சொத்திற்கான 1436 பசலி அடங்கலின் உண்மை நகல் இம்மனுவுடன் ஆவணமாக தாக்கல் செய்துள்ளதாகவும்,

(ii) மேற்படி ஆவணத்திலிருந்தே பிரதிவாதிகள் கூறுவதுபோல் தாவா சொத்துக்களானது வீட்டு மனைகளாக பிரிக்கப்படவில்லை என்ற விவரம் தெரியவரும் என்றும் பிரதிவாதிகள் கூறுவதுபோல் தாவா சொத்தானது வீட்டு மனையிடங்களாக பிரிக்கப்பட்டிருந்தால் வீட்டு மனைக்கான ஒப்புதல் பெறப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்திருப்பார்கள் என்றும், தாவா சொத்தின் 2 முதல் 23 எதிர்மனுதாரர்கள் ஒருபோதும் சுவாதீன அனுபவத்தில் இருக்கவில்லை என்றும், 2 முதல் 23 எதிர்மனுதாரர்கள் சுவாதீன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யாததால் 2 முதல் 23 எதிர்மனுதார்கள் சுவாதீனம் கோரி வழக்கு தாக்கல் செய்ய சட்டப்படி காலதோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 5, 12, 13, 15, 16, 19 முதல் 24 வரையிலான எதிர்மனுதார்கள் தரப்பில் தாக்கல் செய்த எதிர்வழக்குரயைில் மனுச் சொத்தானது வீட்டு மனைகளாக உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், ஆனால், மனுச் சொத்துக்கள் விவசாய நிலமாக இருப்பதாக மனுதாரர் தரதபபில் கூறியுள்ளதாகவும், மேலும், மனுச் சொத்தில் தென்னந்தோப்பு உள்ளதாகவும், அது தவிர ஒரு கிணறும், ஒரு ஆழ்துளை கிணறும் உள்ளதாகவும், மேற்படி சங்கதிகளை நிரூபிக்க வாய்மொழி சாட்சியங்களை விசாரிக்க வேண்டுமென்றும் ஆகையால், மனுச் சொத்திலுள்ள தென்னந்தோப்புகள் பொருத்து மனுச் சொத்தின் இயற்கை அமைப்புகள் குறித்தும் வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்து ஆணையர் நியமனம் செய்வதற்கு உத்தரவிட வேண்டி நீதிமன்றம் ஆணையர் நியமனம் செய்யும்பட்சத்தில் எதிர்மனுதாரருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை என்றும், மேற்படி ஆணையர் நியமனம் கோரும் மனுஅனுமதிக்கப்படாவிடில் மனுதாரருக்கு ஈடு செய்ய

முடியாத இழப்பு ஏற்படும் என வாதிடப்பட்டது.

(iii) 5, 12, 13, 15, 16, 19 முதல் 24 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில் கண்டுள்ள சங்கதிகளை மறுத்து மனுதுாரரும், அவரது தாயாரும் உண்மை சங்கதிகளை மறைத்து தவறான சங்கதிகளின் அடிப்படையில் தாவா தாக்கல் செய்து கடந்த 16 ஆண்டுகளாக தாவாவை நடத்த வராமல் ஒன்றன்பின் ஒன்றாக பல்வேறு மனுக்களை தாக்கல் செய்து வழக்கு விசாரணையை காலதாமதம் செய்து வருவதாகவும், மனுதாரர்களுக்கு தெரியாமல் 1–ம் பிரதிவாதி, 2 முதல் 23 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்துள்ளதாக கூறியுள்ளது தவறு என்றும், மனுச் சொத்தில் 2 முதல் 23 பிரதிவாதிகள் சுவாதீனத்தில் இல்லை என்பதும், மனுதாரர்கள்தான் சுவாதீனத்தில் இருப்பதாக கூறியுள்ளது தவறானது என்றும், தாவா சொத்தானது வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு சக்குபந்தி கண்டு கிரையம் பெறப்பட்டு அதனடிப்படையில் பிரதிவாதிகள் எதிர்வாதம் செய்து வருவதாகவும், தாவா சொத்து தற்போதுவரை விவசாய நிலமாக இருந்து வந்து தாவா சொத்திற்கு கந்தாய ரசீது செலுத்தியும் தாவா சொத்திற்குண்டான 1436 பசலி நகலை தாக்கல் செய்துள்ளதாகவும், அதிலிருந்து தாவா சொத்து வீட்டு மனைகளாக பிரிக்கப்படவில்லை என்றும்,

(iv) 2 முதல் 23 எதிரர்மனுதாரர்கள் ஒருபோதும் சுவாதீன அனுபவத்தில் இருக்கவில்லை என்றும், தாவா சொத்து தற்போது வரை விவசாய நிலமாக இருப்பதால் 2 முதல் 23 எதிர்மனுதாரர்களின் சுவாதீன அனுபவத்திற்கு வழக்கு தாக்கல் செய்யாததால் வழக்கு காலதோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளது பொய்யான சங்கதி என்றும், 2 முதல் 25 பிரதிவாதிகள் தாவா சொத்தை கிரையம் பெற்ற காலத்தில் வீட்டு மனை நிலங்களாக பிரித்து கொடுப்பதற்கு அரசு அனுமதி தேவையில்லை எனறும், வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்ட நிலங்களை மட்டுமே பிரதிவாதிகள் கிரையம் பெற்றுள்ளதால் தற்போது புதிதாக வீட்டுமனை அங்கீகாரங்களை உருவாக்க இயலாது என்று தெரிந்து கொண்டு வீடடு மனை பிரக்கப்பட்டதற்கான ஆவணம் இலலை என்று பொய்யான சங்கதிகள் கூறி இந்த மனுவை தாக்கல் செய்திருப்பதாகவும், தாவா சொத்து விவசாய நிலமாக உள்ளதாகவும், தாவா சொத்தில் ஒரு கிணறு, ஆழ்துளை கிணறு உள்ளது என்றும், மனுச் சொத்து தென்னந்தோப்பாகவும் கிணறு மற்றும் ஆழ்துளை கிணறு உள்ளது என்பதை நிருபிக்க வாய்மொழி சாட்சியங்களை விசாரிக்க நேரிடும் என்றும், ஆகவே, மனுச் சொத்திலுள்ள தென்னந்தோப்பினைப் பொருத்தும், மனுச் சொத்தின் இயற்கை அமைப்புகளைப் பொருத்தும் வரைபடத்துடன் கூடிய அறிககை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய வேண்டுமென்றும், நீதிமன்ற ஆணையர்

நியமனம் செய்வதினால் எதிர்மனுதாரர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்று கூறியுள்ள சங்கதிகள் தவறானது என்றும்.

(v) மனுதார்கள் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்திற்கு செலுத்த வேண்டிய கடனை திரும்ப செலுத்த வேண்டிய நோக்தக்தில்தான் பஞ்சாயத்தார்கள் செய்த பைசல்படி மனுதாரர்கள் தன்னிச்சையாகவும், முழு மன சம்மதியுடனும், தாவா சொத்தை விற்பனை செய்வதற்காக 1-ம் பிரதிவாதி பெயரில் கடந்த 14-12-1998-ம் தேதியில் ஒரு பொது அதிகாரப் பத்திரம் எழுதி கொடுத்தாகவும், அந்த பொது அதிகார பத்திரத்தின் அடிபபடையிலேயே 1-ம் பிரதிவாதி, வாதிக்கு தெரிந்தே வீட்டுமனைகளாக பிரிந்திருந்த தாவா சொத்துக்களின் ஒரு பகுதியை 2 முதல் 23 பிரதிவாதிகளுக்கு தனித்தனி கிரையங்களாக விற்பனை செய்து சுவாதீனம் கொடுத்துவிட்டதாகவும், 2 முதல் 23 பிரதிவாதிகள் கொடுத்த கிரையப் பத்திரம் உண்மையானது மற்றும் நடைமுறப்படுத்தப்பட்டதை ஒப்புக் கொண்டு வாதிகள் ஆட்சேபிக்கவில்லை என்றும், அதை ரத்து செய்யக் கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றும், பின்னிட்டு மனுதாரருக்கும், 1-ம் பிரதிவாதிக்குமிடையே மனவருத்தம் ஏற்பட்டதாக கூறி 1-ம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்தை பொருத்து எழுதிக் கொடுத்த பொது அதிகார பத்திரத்தை 17-08-1999-ம் தேதியில் ரத்து செய்து அந்த ஆவணத்தை பதிவு செய்துள்ளதாகவும். அந்த பொது அதிகார ரத்து ஆணத்திலேயே பொது அதிகார ரத்து ஆவணத்திற்கு முன்புவரையிலும், 1-ம் பிரதிவாதி விற்பனை செய்திருந்த கிரையப் பத்திரங்களை ஒப்புக் கொண்டு விற்பனை செய்யப்பட்ட நிலம் போக மீதமுள்ள சொத்துக்களை மட்டுமே மனுதாரர்கள் பராமரித்து விற்பனை செய்ய விரும்புவதாக குறிப்பிட்டு மேற்படி பொது அதிகார ரத்து பத்திரத்தின் சொத்து விவரத்தில் 3 அயிட்டங்களாகச் சேர்த்து ஏக்கர் 3.80 செண்ட் நிலங்களில் நாளதுவரையில், கிரையம் செய்து கொடுத்தபோது மீதமுள்ள நிலம் போக பூராவும் என மனுதாரருக்கு தெளிவாக குறிப்பிட்டுள்ளதாகவும்,

(vi) தாவா சொத்தின் ஒரு பகுதியை 1-ம் பிரதிவாதி 2 முதல் 23 பிரதிவாதிகளுக்கு வீட்டுமனைகளாக விற்பனை செய்த விவரம் மனுதாரர்களுக்கு கடந்த 17-08-1999-ம் தேதியில் நன்கு தெரியும் என்றும், 17-08-1999-ம் தேதியிலேயே 2 முதல் 23 பிரதிவாதிகளின் கிரையப் பத்திரங்கள் உண்மையானவை சரியானவை என ஒப்புக் கொண்டு பதிவு பெற்ற பொது அதிகார ரத்து பத்திரம் விற்பனை செய்யாத மீதமுள்ள தாவா சொத்துக்ளை பொருத்து ஏற்படுத்தியுள்ளதால், மனுதாரர்கள் மேற்படி பதிவு பெற்ற பத்திர சங்கதிக்கு முரணாக 2 முதல் 23 பிரதிவாதிகளின் பெயரில் தாவா சொத்துக்கள் குறித்து கிரையப் பத்திரங்கள்

ஏற்பட்ட விவரமே தெரியாது என்பதும், கிரையமே செல்லாது என்பதும், அவர்கள் சுவாதீனத்தில் இல்லை என்று பொய்யாக குறிப்பிட்டு 11 ஆண்டுகள் கழித்து 2010–ம் ஆண்டில் தாவா தாக்கல் செய்துள்ளது காலவரம்பு சட்டத்தாலும், முரண்தடை குறிப்பிசைவு கோட்பாட்டாலும் பாதிக்கப்பட்டுள்ளதாலும், தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும்,

(vii) மனுதாரர்கள் பொது அதிகார ரத்து பத்திரத்திலேயே தாவா சொத்துக்கள் 2 முதல் 23 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்யபட்டதை ஒப்புக் கொண்டுள்ளதால், தாவா சொத்தில் 2 முதல் 23 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்யவில்லை என்றும், அவர்கள் சுவாதீனத்தில் இல்லை என்றும், மனுதாரர்களின் ஆவணத்திற்கு முரணாக குறிப்பிட்டு நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி 26 ஆண்டுகள் கழித்து தாக்கல் செய்துள் மனுவானது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், மனுச் சொத்து சம்மந்தமாக மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் மூலம்தான் நிரூபணம் செய்ய வேண்டுமென்றும், நீதிமன்ற ஆணையர் மூலமாக சுவாதீனத்தை நிரூபணம் செய்ய கோர முடியாது என்றும், சாட்சித்ததை திரட்ட முடியாது என்றும், ஆகவே நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி தாக்கல் செய்பட்ட மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென எதிர்வாதம் செய்யப்பட்டது.

(viii) வாதிகளுக்கு தெரியாமல் 1–ம் பிரதிவாதியுடன் 2 முதல் 23 பிரதிவாதிகள் தாவா சொத்தின் ஒரு பகுதியை கிரையம் பெற்றுள்ளதாகவும் 2 முதல் 23 பிரதிவாதிகள் கிரையம் பெற்றதாக கூறியுள்ள சங்கதிகள் தவறான சங்கதி என்றும், 2 முதல் 23 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற கிரையமானது நாளதுவரை அமலுக்கு வரவில்லை என்றும், மேம் தாவா சொத்தின் சுவாதீன அனுபவத்தில் இருக்கவில்லை என்றும், தாவா சொத்தானது வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு குறிப்பிட்ட சக்குபந்திகள் கண்டு கிரையம் பெற்றுள்ளதாக கூறப்பட்டுள்ளது பொய்யான சங்கதிகள் என்றும், தாவா சொத்து தற்போதுவரை விவசாய நிலமாக அமைந்திருப்பதாகவும், மேற்படி விவரங்களை நீதிமன்றத்திற்கு தெரிவிக்கும் பொருட்டு நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து நீதிமன்ற ஆணையர் மூலமாக தாவா சொத்தை பார்வையிட்டு அறிகை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளதைப் பொருத்து எதிர்மனுதாரர் தரப்பில் மறுப்பு தெரிவித்து 2 முதல் 23 பிரதிவாதிகள் தாவா சொத்தில் வீடடுமனைகளாக கிரையம் பெற்றதை மனுதாரர்கள் 1–ம் எதிர்மனுதாரருக்கு எழுதிக் கொடுத்த பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்து பதிவு செய்து கொண்ட ரத்து பத்திரத்திலேயே 1–ம் எதிர்மனுதாரரால் விற்பனை செய்யப்பட்ட நிலங்கள்போக மீதியிருக்கும் நிலங்ளைப் பொருத்து 1–ம் எதிர்மனுதாரருக்கு கொடுத்த பொது அததிகாரத்தை

ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், மனுதாரர்கள் 1–ம் எதிர்மனுதாரர் பெயரில் எழுதிக் கொடுத்த பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்து, ரத்துப் பத்திரம் பதிவு செய்து 11 ஆண்டுகள் கழித்து அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும், இம்மனுவானது மேற்படி பொது அதிகார ஆவணம் ரத்து செய்யப்பட்ட 26 ஆண்டுகள் கழித்து தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் நீதிமன்ற ஆணையர் மூலமாக சாட்சியத்தை திரட்டும் வகையில் இம்மனு தாக்கல் செய்துள்ளதாகவும், நீதிமன்ற ஆணையர் மூலமாக சாட்சியத்தை திரட்டும் வகையில் மனுதாரரின் கோரிக்கை இருப்பதால் இம்மனுவானது தம்ளுபடி செய்யப்பட வேண்டுமென வாதிடப்பட்டுள்ளதைப் பொருத்து,

(ix) அசல் வழக்கனாது வாதிகளால் 1–ம் பிரதிவாதி, 2 முதல் 23 பிரதிவாதிகள் பெயருக்கு ஏற்படுத்திக் கொடுத்த தாவா ஏ செட்யூலில் காண்பிக்கப்பட்டுள்ள கிரையப் பத்திரங்கள் செல்லத்தக்கதல்ல என விளம்புகை பரிகாரம் கோரியும், அதன் தொடர் பரிகாரமான தாவா சொத்துக்களை வாதிகள் விவசாயம் செய்து அனுபவித்து வருவதை பிரதிவாதிகள் சுவாதீன இடையூறு செய்யக் கூடாது என்று நிலைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரப்பட்டுள்ளதால், தாவா சொத்தைப் பொருத்து வாதிகள் 1–ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த பொது அதிகார ஆவணத்தின் பேரில் 1–ம் பிரதிவாதி, 2 முதல் 23 பிரதிவாதிகளுக்கு தாவா ஏ அட்டவணைச் சொத்தில் கண்டுள்ள சொத்துக்களைப் பொருத்து கிரைய ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்ட விவரம் வாதிகள் தரப்பிலேயே ஒப்புக் கொண்டு மேற்படி கிரையத்தை ரத்து செய்ய வேண்டுமென கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளதால், தாவா ஏ அட்டவணைச் சொத்தைப் பொருத்து 1–ம் பிரதிவாதி 2 முதல் 23 பிரதிவாதிகளுக்கு, 1–ம் வாதியின் பொது அதிகார முகவராக இருந்து கொடுக்கப்பட்ட கிரையமானது செல்லுபடியாகக் கூடியதா? இல்லையா என்பதையும் தீர்மானிக்க வேண்டியுள்ளது என்றும், தாவா சொத்து விவசாய நிலமாக இருப்பதாகவும், தாவா சொத்தில் தென்னந்தோப்பு இருப்பதாகவும், கிணறு மற்றும் ஆழ்துளை கிணறு அமைந்துள்ளதாகவும்,

(x) மேற்படி அமைப்புகளை நீதிமன்ற ஆணையர் மூலமாக பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யும் பொருட்டு மனுதாரரின் கோரிக்கையானது ஏற்படையதல்ல என்றும், தாவா சொத்தின் உரிமைமூலத்தை பொருத்து பிரச்சனை உள்ளதால், தாவா சொத்தானது வாதிக்கு பாத்தியப்பட்டதா?, அலலது இல்லையா? என்பதை ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் மூலமாகத்தான் தீர்மானிக்க முடியும் என்றும், மனுதாரரின் கோரிக்கைபடி நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு தாவா சொத்தின் இயற்கை அமைப்புகளை

பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடும் பொருட்டு அது வாதி தரப்பு சாட்சியத்தை திரட்டும் விதமாக அமைந்துவிடும் என்றும், சாட்சியத்தை திரட்டும் வகையில் நீதிமன்ற ஆணையர் நியமனம் இருக்கும்பட்சத்தில் அது அனுமதிக்க உகந்ததல்ல என்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் ***திரு.கிருஷ்ணகுமார்*** அவர்கள் வழங்கிய ***"தனபால் மற்றும் பலர் .. எதிர் .. ராமசாமி"*** என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ***"2018(1) TNLJ Page 381 (Civil)*** ஆகிய முன் தீர்ப்புரையிலும் இதே கருத்தை வலியுறுத்தி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் **திரு.முரளிதரன்** அவர்கள் வழங்கிய **"2019(2) LW page 40"** என்ற முன் தீர்ப்புரையிலும் தெளிவாக சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளதாலும், வாதிகள் 1-ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த 14-12-1998-ம் தேதியிட்ட பொதுஅதிகார ஆவணத்தை 17-08-1999-ம் தேதியில் ரத்து செய்து பதிவு செய்யப்பட்ட ஆவணத்திலேயே மேற்படி ரத்து பத்திரத்தில் பொது அதிகார ஆவண ரத்து தேதிக்கு முன்பாக 1-ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்திருந்த கிரையப் பத்திரங்களை ஒப்புக் கொண்டு விற்பனை செய்யப்பட்ட நிலம் போக மீதமுள்ள சொத்துக்களை மட்டுமே மனுதாரர்கள் பராமரித்து விற்பனை செய்திருப்பதாக தெரிவிக்கப்பட்டு பொது அதிகார ஆவணம் ரத்து செய்யப்பட்டுள்ளதால், அசல் வழக்கில் மேற்படி தாவா ஏ அட்டவணைச் சொத்தைப் பொருத்து 1-ம் பிரதிவாதி 2 முதல் 23 பிரதிவாதிகளுக்கு கொடுத்த கிரையத்தின் செல்லும் தன்மை குறித்து மட்டுமே தீர்மானிக்க வேண்டியுள்ளதால், நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து தாவா சொத்தின் இயற்கை அமைப்புகளை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்வதினால் இந்த வழக்கிற்க்கு எந்தவிதமான பயனும் எற்படப்போவதில்லை என்றும், வாதிகளால் இந்த வழக்கானது கடந்த 2010-ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டு சுமார் 15 ஆண்டுகளுக்கு மேல் எவ்வித முன்னேற்றமும் இல்லாமல் நிலுவையில் இருந்து வருகிறது. இருதரப்பு வாதுரைகளின் அடிப்படையில், வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் குறித்து எழுவினாக்கள் வனையப்பட்டு தாவாவானது விசாரணைக்கு பட்டியலிடப்பட்ட பின்பும், வாதியின் தரப்பில் தாவா விசாரணை தொடங்குவதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் தாவாவை மேலும், காலம் தாழ்த்த வேண்டுமென்ற எண்ணத்தில் பல்வேறு இடை மனுக்களைத் தாக்கல் செய்து தாவா விசாரணையை தள்ளிப்போட்டு வருவதால், இந்த மனுவானது வாதிகளால் நல்லெண்ணத்தின் அடிப்படையில, தாக்கல் செய்யப்படவில்லை

என்பதால், மனுதாரருக்கு எச்சரிக்கை செய்து இம்மனுவானது எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படலாம் என முடிவு செய்யப்படுகிறது.

இறுதியாக, இந்த மனு எதிர்மனுதாரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு பின்னர் 2026–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 10–ம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய உத்திரவு பகரப்பட்டது.

M RAMACHANDRAN

Digitally signed by M RAMACHANDRAN
Date: 2026.08.10 18:41:20 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.

<u>இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> – இல்லை.

M RAMACHANDRAN

Digitally signed by M RAMACHANDRAN
Date: 2026.08.10 18:41:15 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.

அசல்/வரைவு/உத்தரவு
IA No.14/2026-ன்
OS.No.97/2010
நாள்.10-08-2026.